செ.வெ.எண்.46/ஜூன் நாள் :19.06.2018

# தருமபுரி மாவட்டத்தில் சமூக நலத்துறையின் சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 2524 பயனாளிகள் ரூ.6.31 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தகவல்

தருமபுரி மாவட்டத்தில் சமூக நலத்துறையின் மூலம் அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம் தாய்மார்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் பெண்கல்வியை மேம்படுத்துதல், பெண் சிசு கொலையை ஒழித்தல், ஆண் குழந்தையை விரும்பும் மனப்போக்கை கட்டுபடுத்துதல், சிறு குடும்ப நெறியை ஊக்குவித்தல், இளம் வயது திருமணத்தை தடுத்தல் போன்றவை ஆகும். இத்திட்டத்தில் பயன்பெற கண்டிப்பாக தாயாருக்கு திருமணத்தின் போது குறைந்தபட்சம் 18 வயதும் தந்தைக்கு 21 வயதும் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் பெற்றோருக்கு 35 வயதிற்குள் இருக்க வேண்டும். கடைசி குழந்தை பிறந்து 3 ஆண்டுகளுக்குள் மனு அளித்தல் வேண்டும். வறுமை கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். பெண் மற்றும் ஆணுக்கு முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தில் ஆண் வாரிசு இன்றி ஒரே பெண் குழந்தையுடன் தம்பதியரில் ஒருவர் கருத்தடை செய்து கொண்டவர்களுக்கு இக்குழந்தையின் பெயரில் ரூ.50,000/- அரசால் முதலீடு செய்யப்படும். அதே போல் இரண்டு பெண் குழந்தைகளுடன் ஒருவர் கருத்தடை செய்து கொண்டவர்களுக்கு இக்குழந்தையின் பெயரிலும் தலா ரூ.25,000/- வீதம் அரசால் முதலீடு செய்யப்படும். ஒரு பெண் குழந்தைக்கு பிறகு இரண்டாவது பிரசவத்தில் 2 பெண் குழந்தைகள் பிறந்து கருத்தடை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு ஒவ்வொரு குழந்தையின் பெயரிலும் தலா ரூ.25,000/- அரசால் முதலீடு செய்யப்படும். இத்திட்டத்தில் பதிவு செய்ய குழந்தைகளின் பிறப்பு சான்றுகள், வருமானச் சான்று (ஆண்டு வருமானம் ரூ.72,000/-), இருப்பிடச்சான்று, ஜாதிச்சான்று, குடும்ப அறுவை சிகிச்சை சான்று, ஆண் வாரிசு இல்லா சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, குடும்ப புகைப்படம் போன்ற ஆவணங்களுடன் இணையதளம் மூலம் பதிவு செய்துகொள்ளலாம்.

5 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். படிப்பு செலவிற்கு மாதம் ரூ.150 வீதம் பெண் குழந்தைக்கு 5 வயது முடிவடைந்த உடன் 6 வயது முதல் 15 வயது வரை வழங்கப்படும். முதிர்வுத் தொகை பெண் குழந்தை 10 ஆம் வகுப்பு படித்து அரசு தேர்வு எழுதினால் மட்டுமே வழங்கப்படும். 18 வயதிற்கு முன் திருமணம் நடைபெற்ற பெண் குழந்தைகளின் முதிர்வுத் தொகை அரசுக் கணக்கில் சேர்க்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆம் ஆண்டில் 216 பயனாளிகளுக்கு ரூ.54 இலட்சமும், 2012-13 ஆம் ஆண்டில் 505 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 26 இலட்சத்து 25 ஆயிரமும், 2013-14 ஆம் ஆண்டில் 326 பயனாளிகளுக்கு ரூ.81 இலட்சத்து 50 ஆயிரமும், 2014-15 ஆம் ஆண்டில் 379 பயனாளிகளுக்கு ரூ.94 இலட்சத்து 75 ஆயிரமும், 2015-16 ஆம் ஆண்டில் 329 பயனாளிகளுக்கு ரூ.82 இலட்சத்து 25 ஆயிரமும், 2016-17 ஆம் ஆண்டில் 274 பயனாளிகளுக்கு ரூ.68 இலட்சத்து 50 ஆயிரமும், 2017-18 ஆம் ஆண்டு மே மாதம் வரை 495 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 23 இலட்சத்து 75 ஆயிரம் என கடந்த 7 ஆண்டுகளில் ஆக மொத்தம் 2524 பயனாளிகளுக்கு ரூ. 6 கோடியே 31 இலட்சம் மதிப்பில் உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளது மேலும் இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள சமூக நலத்துறை அலுவலத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**